1979 நவம்பர் 8]

சரியான விலையை விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு—இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு—இந்த அரசு பாடுபட்டு வருகிறது. அந்தப் பணி வளர்ந்திருக்கிறது. இன்னும் வளரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்குடி ஆடு வளர்ப்போர் சங்கம்.

*வினா எண். 159 திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூகா, உடன்குடி கிராமத்தில் ஆடு வளர்ப்போர் சங்கம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1978-ம் ஆண்டு ஆடுகள் வாங்க கடன் தொகை வழங்கப்பட்டதா?

(இ) எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது, கடன் தொகை எவ்வளவு? அதில் அரசு மானியம் எவ்வளவு?

(ஈ) தலைவர் மீது ஏதேனும் முறைகேடுகள் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி—

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) பதினான்கு பேருக்கு வழங்கப்பட்டது. கடன் தொகை ரூ. 42,000 அதில் அரசு மானியம் ரூ. 14,000 ஆகும்.

(ஈ) முன்னாள் தலைவர் திரு. பி. எஸ். கே. செந்தில் ஆறுமுகம் என்பவர் மீது லஞ்ச ஊழல் முறைகேடு பற்றி புகார் வந்தது. ஆனால், குற்றச்சாட்டுகள் எதுவும் எழுத்து மூலம் நிரூபிக்கப்படவில்லை.

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, இந்த உடன்குடி ஆடு வளர்ப்புச் சங்கத் தலைவர், கடன் வழங்கப்பட்ட பிறகு குறைந்த நாட்களில் நீக்கப்பட்டு வேறு ஒரு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படி மாற்றி நியமிக்கப்படுவதற்குக் காரணம் என்ன? அந்தத் தலைவர் மீது ஏதாவது புகார் வந்ததா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, உடன்குடி ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கம், திருச்செந்தூர் தாலுகா, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இச்சங்கம் 2–3–1977 இல் பதிவுசெய்யப்பட்டு, அன்றே துவக்கப்பட்டது. இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. பி. எஸ், கே. செந்தில் ஆறுமுகம் ஆவார். சங்க நிர்வாகஸ்தர்கள் நான்கு பேர்களிடமிருந்து முன்னாள் தலைவர் மீது கையாடல் பற்றிய புகார் உதவி இயக்குநர்,

தூத்துக்குடி அலுவலகத்திற்கு வந்தது. இது தொடர்பாக கால் நடை பராமரிப்புத் துறை அலுவலர், மற்றும் பேய்குளம் பாண்டியன் கிராமம் வங்கி மேலாளரும் முன்னறிவிப்பு இன்றி சென்று கடன் கொடுக்கப்பட்ட 14 நபர்களின் ஆடுகளின் எண்ணிக்கையை சரி பார்த்திருக்கிறார்கள். எண்ணிக்கை சரியாகவே இருந்தது. முன்னாள் தலைவர் மீது கூறப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் எழுத்துமூலமாக நிரூபிக்கப்படவில்லை. சங்கம் திறம்பட செயல்படுவதற்காக, உடன்குடி விஸ்தரிப்பு கால்நடை உதவி மருத்துவர், தக்க நடவடிக்கைகள் எடுத்து நிர்வாக இயக்குநர் மற்றும் அங்கத்தினர்களின் பொதுக் குழு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் முன்னாள், தலைவர் திரு. பி. எஸ். கே. செந்தில் ஆறுமுகம் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அச்சங்கத்தின் உதவித் தலைவராகப் பணியாற்றிவந்த திரு. பி. இராமநாத ஆதித்தன் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றி வருகின்றார். நிர்வாக இயக்குர்களும் தேர்வுசெய்யப்பட்டு செயலாற்றி வருகின்றனர்.

கண்டாச்சிபுரத்தில் கால் நடை மருத்துவ மனை

*வினா எண். 160 திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிட பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம் கண்டாச்சிபுரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் குறிப்பு ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கால்நடை மருத்துவ மனை திறக்க ஏற்பாடு செய்யப்படும்?

மாண்புமிகு செல்வி பி, டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரியும், மருந்தக கட்டிடத்திற்காகும் செலவில் 2/3 பங்கினை ஏற்கவும் தீர்மானம் ஒன்றை கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு நிறைவேற்றி அனுப்பியுள்ளது. கால்நடை மருந்தகம் தற்காலிகமாக செயல்பட வாடகையில்லா கட்டிடமொன்றினை ஒதுக்கித் தரவும் மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கான நிலப்பரப்பினை ஒதுக்கித்தரவும் ஏற்று, முகையூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பவில்லை. மேற்படி தீர்மானங்கள் முகையூர் ஊராட்சி மன்றத்திடமிருந்து பெறப்பட்டவுடன் கண்டாச்சிபுரத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.